★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✠ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: பங்குனி 21உ செவ்வாய் (3—4—56) ★ ★ வெளியூர்: பங்குனி 22உ புதன் (4-4—56) [இதழ் 249

ஆத்திரம் வருவதால் மட்டும் 'அவல நிலை' ஒழியுமா?

"சேரிகளின் மோசமான காட்சிகளை நான் காணும் போது எனக்கு ஆத்திரம் வருகிறது. இந்நிலைக்கு யார் மீது வருத்தம் உண்டாகிறது என்று எனக்கே விளங்க வில்லை. என் மீதே ஏற்படுவதாக இருக்கலாம்; ஆனால் சேரிகளின் சோகக் காட்சிகளைக் காணுகின்றபோது, எனக்கு வருத்தமும், ஆத்திரமும் ஏற்படுகின்றனவென்பது உண்மை!"

—என்று, பிரதமர் நேரு, பத்திரிகையாளரிடம் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

கண் கெட்ட பிறகு ஞாயிறு வணக்கமா?

முதலாண்டு திட்டம் முடியும் கட்டத்திலா இந்த முகாரி?

மத்திய உதவியில் ஒரு பொறியியல் கல்லூரியும் நிறுவப்படவில்லையே!

ஒரு ஆலைத் தொழிலாளர் உறையுள் கட்டவும் உதவி பெறவில்லையே!

சிலோனிலிருந்து நாடு திரும்பும் தொழிலாளர்களின் மறுவாழ்வுக்கு மார்க்கம் தேடவில்லையே!

கிழக்கு பஞ்சாப், பீகார், பம்பாய், மத்தியப் பிரதேசம், மேற்கு வங்காளம் முதலிய மாகாணங்கள் பயன் பெற்றுள்ளனவே!

தனது தேவைகளைக் கோர டெல்லியில் ஒரு அலுவலகம் திறக்க வேண்டும் சென்னை அரசாங்கம்!

மக்கள் சபை தமிழ்நாட்டு உறுப்பினர்களின் காலங் கடந்த முறையீடு

ஆலைத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டித் தருவதற்கு என்று மத்திய அரசாங்கம், மாகாண அரசாங்கங்களுக்குத் தர முன்வந்த ஐம்பது சதவிகித உதவித் தொகையைப் பெற்று, மற்ற மாகாணங்கள் 66,000 வீடுகள்வரை கட்டியுள்ளன. ஆனால், நமது சென்னை அரசாங்கமோ அத்தொகையின் உதவிகொண்டு ஒரு தொழிலாளர் உறையுள்கூட இதுவரை கட்டவில்லை.

அதுபோன்றே உயர்நிலைப் பள்ளிகளுக்குகந்த விளையாட்டு அரங்கு, சொற்பொழிவு மண்டபம், நீச்சல் குளம் போன்றவைகளை அமைப்பதற்கான மத்திய அரசாங்க உதவித் தொகைகளை மற்ற மாகாணங்கள் உயர்ந்தபட்சம் பெற்று பயனடைந்துள்ளன. ஆனால், நமது அரசாங்கமோ அதை முழுதும் பயன்படுத்திக் கொள்ளத் தவறிவிட்டது.

அதுவுமன்றி, மத்திய உதவியால் நிறுவப்பட்ட பொறியியல் கல்லூரி ஒன்றுகூட இம்மாகாணத்தில் கிடையாது.

மத்திய அரசாங்கத்தின் புயல் நிவாரண உதவியைக் கொண்டு, நாகை முதல் இராமநாதபுரம் வரையில் உள்ள கட்லோரப் பாதைகளைப் புதுப்பித்து அமைக்கக்கூடும்.

இலங்கை, பர்மா முதலிய நாடுகளிலிருந்துத் திரும்பி வரும் தமிழ்மக்களின் மறுவாழ்வை, மத்திய உதவியுடன் உருவாக்க முடியும்.

மேற்கூறிய இனங்களில் உதவிகளை, கிழக்கு பஞ்சாப், பீகார், பம்பாய், மத்தியப் பிரதேசம், மேற்கு வங்கம் முதலிய மாகாண அரசாங்கங்கள் மத்திய அரசாங்கத்திடமிருந்து பெற்று பயனடைந்து வருகின்றன. மத்திய அரசாங்கங்களின் மானியங்களைப் பெறும் ஒரு நோக்கத்துடன், மேற்குறிப்பிட்ட மாகாண அரசாங்கங்கள் ஒவ்வொன்றும், தம் தம் அரசாங்க சார்பில் தக்க அதிகாரிகளைக் கொண்ட அலுவலகங்களை டில்லி தலைநகரில் நிறுவிக்கொண்டு, தம் தம் மாகாண மக்களின் நலன்களை பாதுகாத்துக்கொண்டு வருகின்றன.

அந்தந்த மாகாணங்களில் இருந்துத் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் சபை உறுப்பினர்களாக இருப்பவர்களும், அவர்களுக்கு உரிமையுடைய மாகாண நடுவர் அலுவலகங்களுடன் நெருங்கியத் தொடர்பு கொண்டு, அம்மம் மாகாணங்களுக்கு வேண்டிய உதவிகளுக்கு, மத்திய அரசாங்கத்தை நெருக்கிப் பிடித்து, கூடுமானவரை உதவியின் பெரும் பங்கைப் பெற்று வருகின்றனர்.

மற்ற மாகாணங்களின் வழியைப் பின்பற்றி, சென்னைக்குரிய பங்கையும் பெற்று நலம் பெற வேண்டுமே என்பதில் முன்னுள் இருந்த முதலமைச்சர் ஆச்சாரியாரும் அக்கரை கொண்டதில்லை. அவரிடத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கிற முதலமைச்சர் காமராசரும் இதுவரை கருத்தைச் செலுத்தினதாகத் தெரியவில்லை.

முதலமைச்சர் கவலைக் குறைவு ஒரு பக்கம் இருக்க, தமிழ் மக்கள் பிரதிநிதிகளாக மக்கள் சபையில் இடம் பெற்றிருக்கும் தமிழ் நாட்டு உறுப்பினர்கள், இத்துறையில், இதுவரை கவலை கொண்டார்களா என்றால், அந்தக் கேடும் இல்லை. இப்பொழுதுதான் அவர்களுக்கு, இத்துறையில் கவனம் செலுத்தவேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டு இருக்கிறது. இதுவரை உறங்கத்தான் செய்தார்களோ அல்லது உல்லாசத்தில் தான் பொழுது போக்கினார்களோ!

முதலாண்டுத் திட்டம் முடிந்து இரண்டாவது திட்டம் துவங்கப்பட இருக்கும் இத்தருணத்திலாவது, அம்மக்கள் சபை உறுப்பினர்களுக்குத் தங்களைத் தேர்ந்தெடுத்தவர்கள் என்ற பெயரில் தமிழ் நாட்டில் சில 'சென்னையர்'கள் இருக்கிறார்கள், அவர்களுடைய நலனுக்குத் தாமும் உழைக்க வேண்டும என்ற நினைப்பு ஏற்பட்டதே, அதுவே பாராட்டக் கூடியதாகும்!

முதலமைச்சரும், நிதி அமைச்சரும், மற்ற அமைச்சர்களும் தான், 'இம்மென்றால் டில்லி; ஏனென்றால் டில்லி' என்ற நிலையில்தான், அடிக்கடி டில்லிக்கும் சென்னைக்கும் பறந்து கொண்டிருக்கிறார்கள்! அவர்களுக்காவது அந்த புத்தி வந்ததா? மத்திய அரசாங்க மானியங்களை மற்ற மாகாணங்கள் பெரும் அளவில் கொள்ளை கொண்டு போகின்றனவே, நமது பங்கைக் கேட்டுப் பெறுவோம்—வாதாடிப் பெறுவோம் என்று, நமது அமைச்சர்கள் இதுவரை எண்ணி இருக்கக்கூடாதா? இது பற்றி எல்லாம் தெரிந்துகொள்ளாது இருந்தவர்களை, கேட்கத் தவறியவர்களை 'கையாலாகாத அமைச்சர்கள்' என எவராவது கூறிவிட்டால் அல்லது கூறிவிடுவார்களோ என ஐயம் ஏற்பட்டால், உடன் நிதி அமைச்சர் கோபித்துக்கொள்ளுவார்—கோபம் மட்டும் போதுமா? கொஞ்சம் திறமையும் வேண்டுமே!

இப்போதுதான் தமிழ் நாட்டு மக்கள் சபை உறுப்பினர்கள், இத்துறையில் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று, முதலமைச்சரிடம் மனு ஒன்று தாக்கல் செய்திருக்கிறார்களாம்! 'பார்க்கலாம்! ஆகட்டும்! அதற்கென்ன அவசரம்?' என்று முதலமைச்சர் வழக்கம்போல் இதற்கும் சொல்லி இருக்தாலும், அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை!

ஆசை வார்த்தைகள் இங்கே! ஆலைகள் உருவாகுவது அங்கே!

கனரகத் தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில் நிறுவப்படாத வரையில் வேலையின்மைக்கு விமோசனமே இல்லை

வாய்ப்பும், வசதியும் படைத்தும் வகையற்ற நிலை ஏன்?

வேண்டிய திட்டங்களைப் பெற சென்னை சர்க்கார் முயல வேண்டும்

சட்டசபையில் காங்கிரஸ் உறுப்பினர் முறையீடு!

சென்னை, ஏப். 2—

"மாநிலத்தில் மேற்கோள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு இப்போது ஒதுக்கப்பட்டிருக்கும் ரூ. 170·3 கோடி போதுமானதல்ல."

"எனவே, மாநிலத்தில் கனரகத் தொழில்கள் போன்றவற்றை ஏற்படுத்தத் தேவையான வசதிகள் இருப்பதால், மாநிலத்தின் தேவைகள் என்ன என்பதை நன்ருகக் கண்டறிந்து, திட்ட நிறைவேற்றத்திற்குப் போதுமான அளவு பணம் ஒதுக்க வேண்டும்."

மாநில சர்க்கார் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நகல் திட்டத்தைப் பிரரேபித்து, மாநிலத்தின் அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்ற மேற்கொண்டு நிதி ஒதுக்கவேண்டுமென்று கோரும் தீர்மானம் ஒன்றை நிதியமைச்சர் சுப்பிரமணியம் கொண்டுவந்தபோது, காங்கிரஸ் உறுப்பினரான வி கே. இராமசாமி அவர்கள், சர்க்கார் பிரரேபணைகளுக்கு மேற்கண்ட இரண்டு திருத்தங்களைக் கொண்டுவந்தார்.

மேற்குறிப்பிடப்பட்ட இரண்டு திருத்தங்களையும் அவர் கொண்டு வந்து பேசியதாவது:—

"மாநில சர்க்கார் தன்னாலியன்றவரை முயன்று பார்த்தும்கூட, தென்னாடு மத்திய சர்க்காரால் புறக்கணிக்கப்பட்டுக்கொண்டேதான் வருகிறது என்பதை மறுக்க முடியாது. இங்கு வேலையில்லாத் திண்டாட்டம் பெருகிக் கொண்டு வருவதுபோல் மக்கள் தொகையும் பெருகிக்கொண்டே இருக்கிறது. இப்படி இருக்கும்போது, கனரகத் தொழிற்சாலைகள் இங்கு நிறுவப்படாதிருக்கும் வரையில் இங்கு நிலவி வரும் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு முடிவே கிடையாது.

"இந்த மாநிலத்தில் சிமெண்ட், அலுமினியம், காகிதம், உரம் போன்ற தொழிற்சாலைகள் நிறுவ போதுமான வசதிகளும், வாய்ப்புகளும் இருக்கின்றன.

"இங்கு சர்க்கரையே இல்லாமலிருப்பதால் இம்மாநில முழுமையிலும் எவ்வளவு சர்க்கரைத் தொழிற்சாலைகளாலும்கூட நிறுவலாம். இங்குள்ள மக்கள் வெறும் விவசாயத்தை மட்டும் நம்பி வாழ முடியாது. பெரிய கனரகத் தொழில்கள் சென்னை மாநிலத்தில் ஏற்படுத்தப்படும் என்று கூட ஆசை வார்த்தைகள் கூறப்படுகிறது; ஆனால் இறுதியில் அத்தொழிற்சாலைகளெல்லாம் வடக்கிலேயேதான் நிறுவப்படுகின்றன.

"நமது மாநிலத்தில் மின்சாரத் தொழிற்சாலைகளும் ஏற்படுத்தப்படும் என்று முதலில் கூறப்பட்டது. ஆனால் நடந்ததெல்லாம் அத்தொழில்களெல்லாம் போபாலில் நிறுவப்படுகின்றன.

"நமது மாநிலத்தைப் பொறுத்தவரையில் கால்நடைச் செல்வத்தையாகிலும் இன்னும் அதிகமாகப் பெருக்கவேண்டும். அதற்கும்கூடத் தேவையான நிதி உதவி இல்லை; முதலாண்டுத் திட்டத்தில் எவ்வித உதவியும் தரப்படவில்லை.

"எனவே பாராளுமன்றத்தில் உள்ள தமிழ் நாட்டு உறுப்பினர்களைப் பயன்படுத்திக் கொண்டு நமது மாநிலத்திற்கு வேண்டிய திட்டங்களை யெல்லாம் மத்திய சர்க்காரிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு நமது சர்க்கார் முயற்சி செய்யவேண்டும்."

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 3—4—'56 செவ்வாய்

வாதிக்கும்-பிரதிவாதிக்கும் வழக்காடும் வழக்கறிஞர்!

மாகாணப் புனரமைப்பு மீது சென்னை சட்டசபையில் நடைபெற்ற விவாதம் எதிர்பார்த்தபடியே முடிந்துவிட்டது. தமிழ்ப் பெருங்குடி மக்களின் உள்ளக் குமுறலைத் தெளிவாக எடுத்துக்காட்டி, எதிர்க் கட்சியினரால் கொண்டுவரப்பட்டத் திருத்தங்கள் அனைத்தும், ஆளும் காங்கிரஸ் கட்சியால் தோற்கடிக்கப்பட்டுவிட்டன. அவசியமற்ற அரசாங்கத் திருத்தங்களுடன், மசோதா மேனி குலையாது நிறைவேற்றப்பட்டு விட்டது.

மாகாணங்களைத் திருத்தி அமைப்பது குறித்து பசில் அலி குழு உருவாக்கிய முடிவுகள்மேல், ஏற்கனவே சென்னை சட்டசபை விவாதம் நடத்தி இருக்கிறது. தமிழ்நாட்டின் கேரள எல்லைப் பகுதியிலும், ஆந்திர எல்லைப் பகுதியிலும், விடப்பட்டுக் கிடக்கும் தமிழ்ப் பகுதிகளை, சென்னை மாகாணத்துடன் இணைக்க வேண்டும் என்று ஆளும் கட்சியான காங்கிரஸ் கட்சியே மிகத் திறமையாக வாதிட்டது. அவ்வாதத்தைக் கேட்டு எதிர்க் கட்சியினரும் உள்ளம் பூரித்து, காங்கிரஸ் கட்சியின் கோரிக்கைகளை, அப்படியே முழுமனதுடன் ஆதரித்து வாக்களித்தனர். மசோதாவும், சட்டசபையில் ஒருமனதாக நிறைவேறியது.

அந்த நேரத்தில், எல்லையோரத் தமிழ்ப் பகுதிகளின் பிரச்சினையைப் பொருத்தவரையில், ஆளும் காங்கிரஸ் கட்சியின் கருத்து இது, மற்ற எதிர்க் கட்சிகளின் கருத்து இது, என்று பேதப்படுத்திப் பார்க்க முடியாத வகையில், தத்துவ அடிப்படையில் இருசாராரிடையேயும் ஒற்றுமை நிலவி இருந்தது. அத்தகு ஒற்றுமை உருவாக்கப்பட்ட நேரத்தில், இந்தியாவின் ஐக்கியத்தை உடைத்தெறியும் கருத்துடன் தான் பிரச்சினையை நோக்குகிறார்கள் எனக் காங்கிரஸ் கட்சியினர்மீது, மற்ற எதிர்க் கட்சியினர் குற்றஞ் சாட்டவில்லை. அதே குற்றத்தை, காங்கிரஸ் கருத்தை முழுமனதுடன் வரவேற்று ஆதரித்த எதிர்க் கட்சியினர் மீதும், ஆளும் காங்கிரஸ் கட்சியின் சார்பில், பழி சுமத்தித் தூற்றப்படவில்லை.

அதுவுமன்றி, இந்தியன் என்றக் கண்ணோட்டத்தை மறந்துவிட்டுத்தான், தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளைக் காங்கிரஸ் கட்சி வலியுறுத்துகிறது எனக் குறைகூறப்படவில்லை. அதேபோன்று, அக்கோரிக்கைகளுக்கு உடன்பாடு காட்டிய எதிர்க் கட்சியினர் மீதும், அக்குற்றத்தைச் சாட்ட காங்கிரஸ் கட்சியும் முன்வரவில்லை.

அந்த நேரத்தில் எல்லையோரத் தமிழ்ப் பகுதிகளில் வாழும் தமிழ் மக்களின் விழைவுப்படி, அப்பகுதிகளை சென்னையுடன் இணைத்துக் கொள்வதுதான் நியாயமாகும் எனத் திரிகரண சுத்தியாக நம்பியதுடன், அந்த கோரிக்கையைத் தீர்மான மூலமாக நிறைவேற்றி மகிழ்ந்த ஆளும் காங்கிரஸ் கட்சி, மாகாணப் புனரமைப்பு மசோதாவை விவாதிக்கும்போது, முன்னாள் கொண்ட கண்ணோட்டத்திற்கு மாறாகவும், ஆதரித்துப் பேசிய பேச்சுக்களுக்கு முரணாகவும் நடந்துகொண்டு இருக்கிறது. அதே நேரத்தில், அன்று காங்கிரஸ் கட்சியின் கோரிக்கைகளுக்கு முழுமனதுடன் ஆதரவு தந்த மற்ற எதிர்க் கட்சிகள், தங்களுடைய அன்றைய நியாயமானப் போக்கை மாற்றிக் கொள்ளாமலே இன்னும் செயல்பட்டு இருக்கிறது.

இந்தியன் என்ற எண்ணத்திலும், இந்திய ஒற்றுமை என்றக் கருத்திலும் நின்றுதான், தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கையைக் காங்கிரஸ் கட்சி நோக்குகிறது என்று, தம்மாலேயே அன்று நியாயமானது என ஒப்புக்கொள்ளப்பட்ட தமிழ் மக்களின் நியாயமான விருப்பங்களை ஒழித்துக் கட்டுவதற்கு, காங்கிரஸ் சார்பில் நியாயம் பேசுகிறார் நிதி அமைச்சர் எனப் பெயர்தாங்கியுள்ள பெரிய மனிதர். இந்தியர் என்ற புத்தியும், இந்திய ஒற்றுமை என்றக் கருத்தும், தமிழர்களின் கோரிக்கைகளைத் தீர்மானமாக்கிய காலத்திலேயே, நிதி அமைச்சருக்கு இருந்திருக்க வேண்டும்.

அந்தப் புத்தி, அவருக்கு ஏன் அப்பொழுது இல்லாமல் போய்விட்டது? இப்பொழுது எங்கிருந்து முளைத்தது? இந்தக் கேள்விகள் எவருக்கும் எழுவது நியாயமேயாகும்.

தமிழர்களின் கோரிக்கைகளை நியாயமானது என்று, காங்கிரஸ் கட்சியின் சார்பில் தாம் ஆதரித்து வாதாடின காலை, தம்மை ஒரு இந்தியன் அல்ல என்றோ, இந்திய ஒற்றுமை கூடாது எனத் தாம் கொண்டிருப்பவராகவோ கருதித்தான் வாதாடினதாக, நிதி அமைச்சர் எடுத்துக் கூறவில்லை. அன்று பேசினதற்கு மாற்றமாகவும் முரண்பாடாகவும் இன்று பேசும் சங்கடம் ஏற்பட்டதும், இந்தியன்—இந்திய ஒற்றுமை என்ற, விஷயத்திற்குத் தொடர்பற்ற நியாயங்களை நிதி அமைச்சர் கக்குகிறார். அத்தொடர்பற்ற நியாயங்களுக்கு எதிராக இருப்பது போல், சட்டசபை எதிர்க் கட்சியினரை ஏசவும், எதிரடித்துப் பேசவும் நிதி அமைச்சர் முனைந்துவிட்டார்.

தமிழ் மக்களின் விருப்பங்களை ஆதரித்து அன்று வாதாடியகாலை அவர் எடுத்துக்காட்டிய மறுக்க முடியாத நியாயமான காரணங்களை, உடைத்தெறியும் வகையில் காரணங் காட்டி விவாதிக்க நிதி அமைச்சரால் இயலவில்லை. தமக்குள்ள இந்த இயலாமையை மக்கள் கருத்திலிருந்து மறைக்கவும், அதே நேரத்தில் தமிழ் மக்களின் பகையிலிருந்துத் தப்பிப் பிழைக்கவும், தனது துரோகச் செயலுக்கு இந்தியன் என்ற உணர்வையும், இந்திய ஒற்றுமை என்றக் கருத்தையும் துணைக்கிழுக்கிறார் நிதி அமைச்சர். எனவே, அந்த இரண்டின் மீதும் பாரத்தைப் போட்டுவிட்டு தமிழ் மக்களின் கோபத்திலிருந்து மீட்சி பெற நிதி அமைச்சர் முயற்சிக்கிறார்.

எவர் கட்சியிலும் பற்றில்லாது, முதல் நீதி மன்றத்தில் வாதியின் சார்பிலும், இரண்டாம் நீதிமன்றத்தில் பிரதிவாதியின் சார்பிலும், ஒழுக்கத்தை மறந்து, பணம் ஒன்றையே குறியாகக் கொண்டு, கூலிக்கு மாரடிக்கும் வழக்கறிஞராக இருந்தே நிதி அமைச்சர், தமிழ் மக்கள் கோரிக்கைகளில் நடந்து கொண்டு இருக்கிறார் எனக் கூறுவதுதான் முறையாகும். வழக்கறிஞர் தொழிலை விட்டு ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்த பின்னரும்கூட, அத்தீய பழக்கத்தை அவரால் விட்டுத் தொலைக்க முடியவில்லை போலும்!

இவர்தான் காந்தீயவாதியாம்! கடைந்தெடுத்த சத்தியாக்கிரகியாம்! வெட்கக்கேடு!

'தொழில் அமைச்சர் தேர்தல் செல்லாது'

மைசூர் தொழில் அமைச்சர் எச். எம். சென்னபாசப்பாவின் தேர்தல் செல்லாது என்று, மைசூர் தேர்தல் விசாரணை மன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மைசூர் சட்டசபைக்கு 1954-ல் நடைபெற்ற துணைத் தேர்தலில் பெரிய பட்டணம் தொகுதியிலிருந்து சென்னபாசப்பா தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1955-56-ல் இந்தியாவுக்கு ரூ. 49·45 கோடிவரை உதவி அனுப்ப பல்வேறு நாடுகள் ஒப்பமளித்துள்ளதாக மத்திய அரசினர் நிதி அமைச்சர் சி. டி. தேஷ்முக் மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

விடுதலை கோருவோர் மீது துருப்புகள் வெறியாட்டம்

269 பேர் கொலை; 76 பேர் கைது

48 மணி நேரம் இடைவிடாதத் தாக்குதல்!

ஆல்ஜியர்ஸ் ஏப். 1—

சென்ற வார இறுதியில், அல்ஜீரியக் 'கலகக்காரர்'களுக்கும்—பிரெஞ்சுத் துருப்புகளுக்கும் இடையே நடைபெற்ற கடுமையான தாக்குதல்களின் விளைவாகப் பிரெஞ்சுத் துருப்புகள் 269 கலகக்காரர்களைக் கொன்றதுடன், 76 பேர்களை சிறைபிடித்துள்ளனர் என்று தெரியவருகிறது

கலகம் துவங்கிய முதல் நாளில் 94 பேர் கொல்லப்பட்டனர் என்றும் ஆனால் மறுநாளில் 175 பேர் கொல்லப்பட்டனர் மேலும் தகவல்கள் தரப்பட்டிருக்கின்றன.

இதனிடையில் மேலும் புதிதாக 2,000 பிரெஞ்சுத் துருப்புகள் இங்கு வந்துள்ளன என்றும், இன்னும் இரண்டொரு தினங்களில் மேற்கொண்டு 2,000 துருப்புகள் இறக்குமதியாகலாம் என எதிர்பார்க்கப்படுவதாகவும் கூறப்பட்டிருக்கிறது.

வடநாட்டு மாணவர் ஒழுங்கீனம்!

அகமதாபாத், மார்ச் 30—

உத்திரப் பிரதேச மாநில உயர்நிலைப்பள்ளி, 'இண்டர்மீடியட்' கல்விக் குழு நடத்திய இறுதிப் பரீட்சைகளின்போது, மாநில முழுமையிலுமுள்ள பல திறப்பட்ட பள்ளி, கல்லூரி மாணவர்களில் 400 பேர், தேர்வுத் தாள்களுக்கு விடையெழுதும்போது அருகிலுள்ள மாணவர்களைப் பார்த்து 'காப்பி' அடித்தோ, அல்லது தேர்வுக்கான விடையெழுதும் அறைகளுக்குள், தங்களுடன் சிறு சிறு குறிப்புகளை எடுத்துச் சென்று அவற்றைப் பார்த்து விடை எழுதியோ ஒழுங்கற்ற முறையில் நடந்துகொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மேற்படித் தேர்வு சென்ற மார்ச் 16-ந் தேதி முதல் உ. பி. மாநிலத்தில் மொத்தம் 850 மத்திய இடங்களில் நடைபெற்றதென்றும் 2,74,000 மாணவர்கள் பரீட்சை எழுதினர் என்றும் தெரியவருகிறது

புலி வாயில் சிக்கித் தவித்தவர்

மனைவி செய்த உதவியால் தப்பிப் பிழைத்தார்

செங்கோட்டை, மார்ச் 31—

வடகரை குடியிருப்பைச் சார்ந்த சுமார் 32 வயதுடைய பொன்னையா என்பவர், தான் வசித்து வந்த அடவிநயினார் கோவிலுக்கு மேல்புறமுள்ள ஏலத் தோட்டத்தில், 24-ந் தேதியன்று ஒரு புலியிடம் சிக்கிக்கொண்ட கோர சம்பவம் நடைபெற்றிருக்கிறது.

இரவில் தன குடிசைக்கு வெளியே படுத்துறங்கும்போது, அப்பாதையில் வந்த ஒரு புலி, பொன்னையாவின் வலது கால் விரல்களை நன்றாகக் கடித்துக் கதைத்ததுடன், அப்படியே பொன்னையாவை இழுத்துக் கொண்டே சென்றிருக்கிறது

ஐயோ! ஐயோ! என்றலறிய பொன்னையாவை குடிசையினுள் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்த மனைவி கண்டு, ஒரு கோடாரியை எடுத்து பொன்னையாவின் பக்கம் வீசியிருக்கிறார்.

உடனே பொன்னையா, தன் வேதனையைக்கூடப் பாராமல், கோடாரியையெடுத்து புலியின் மீது அடித்திருக்கிறார்; புலி ஓட்டம் பிடித்தது.

பொன்னையா செங்கோட்டை சர்க்கார் மருத்துவமனைக்குக் கொண்டுவரப்பட்டார். டாக்டர் அவரது வலது கால் விரல்கள் அனைத்தும் வெட்டியெடுத்து சிகிச்சை அளித்துவருகிறார்.

இந்தியாவின் 'தேவைப் பொருள்' நெய்வேலியில் கிடைக்கிறது!

ஐந்தாண்டுத் திட்டத்திற்கு அரிய வாய்ப்பு

கோவை, மார்ச் 31—

நெய்வேலியில் மின்சாரப் பீங்கான் பொருட்கள், ஏனைய சுகாதார உபகரணங்கள் தயாரிக்கும் நிலையம் ஒன்றை சென்னை சர்க்கார் விரைவில் துவக்குவர் எனத் தெரியவருகிறது.

நெய்வேலிப் பகுதியில், பீங்கான் தயாரிப்புக்குப் பயன்படக்கூடிய 'சைனா களிமண்' என்ற களிமண் நிறைய கிடைப்பதால் அந்த இடம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

வருட முழுவதும் 2 000 டன் 'இன்சுலேட்டர்'களும், 3,600 டன் சுகாதார உபகரணங்கள், மற்றும், வழவழப்பான கற்களும் தயாரிக்கும் ஓர் நிலையம் நெய்வேலியில் ஏற்படுத்தப்படும்.

பூமியை வெட்டியதும் அதிக ஆழமில்லாமல் மேல்பரப்பிலேயே வேண்டிய சைனா களிமண் கிடைப்பதால் நெய்வேலித் திட்டம் நிறைவேறி நிலக்கரி கண்டுபிடிக்கும் வரை இத்திட்டம் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை.

இந்தியாவின் மொத்த பீங்கான் தேவையில் 30 சதவிகிதம் இந்தியாவில் தயாரிக்கப்படுகிறது. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் பீங்கானுக்கு நல்ல தேவை ஏற்படும்.

கிராம மின்சார விரிவாக்கும் திட்டம் நிறைவேற்றப்பட இருப்பதால், ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு மின்சாரத்தை எடுத்துச் செல்லப் பயன்படும் பீங்கான் 'இன்சுலேட்டர்'கள் தேவை வருங்காலத்தில் அதிகமாகும்.

தென்னாட்டவர் மறியல்

பூனாவில் எழுவருக்கு ஒரு மாதம் சிறைத் தண்டனை

பூனா, மார்ச் 31—

பம்பாய் நகரம், பெல்காம், கார்வார் இவற்றையும் சேர்த்து சம்யுக்த மாராட்டிரம் அமைக்க வேண்டுமென்று கோரி, மார்ச் 29-ந் தேதி மறியல் செய்த 7 தென்னாட்டவர்களுக்கு தலா ஒருமாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ரஷ்ய முறையில் கூட்டுறவு மருத்துவமனைகள்

ஐதராபாத்தில் முயற்சி

ரஷ்யாவில் உள்ளது போன்றே, கூட்டுறவு மருத்துவமனைகள் ஏற்படுத்த ஐதராபாத் அரசியலார் திட்டமிட்டுள்ளனராம். முதலில் இவ்வாண்டு ஒரு மருத்துவமனை ஏற்படுத்தப்படுமாம். இதற்காக வரவு-செலவுத் திட்டத்தில் ரூ 2 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அமையவிருக்கும் மருத்துவமனை ஒன்று 30,000 மக்களுக்குப் பயன்படுமென்றும், இதில் சேரும் ஒவ்வொரு குடும்பமும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 2 கட்டணம் செலுத்த வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது.

மேற்கு நாடுகளுக்கு கம்போடியா எச்சரிக்கை

கம்போடியப் பிரதமர் பதவியை விட்டு விலகிய நரோடாம் ஷிகானோ, கூட்டம் ஒன்றில் பேசுகையில், வருகிற 3 வார காலத்திற்குள்ளாக மேற்கு நாடுகளுக்கும்—கம்போடியாவிற்கும் இடையேயுள்ள பிரச்சினைகள் தீர்க்கப்படாவிட்டால் தம்முடைய நாடு (கம்போடியா) ரஷ்யாவிற்கும், சைனாவிற்கும் கோரகத் தன்னைத் திருப்பிக்கொள்ளும் என்று கூறியிருக்கிறார்.

இந்தியாவுக்கு 220 லட்சம் டாலர் மதிப்புள்ள உருக்கு

அமெரிக்கா தர இசைவு

இந்திய இரயில்வேக்களின் நேரடித் தேவைகளை நிறைவேற்ற இவ்வருடத்தில் 220 இலட்சம் டாலர் (சுமார் ரூ. 11 கோடி) மதிப்புள்ள உருக்கை தர அமெரிக்கா சம்மதித்துள்ளதாகத் தெரியவருகிறது.

இந்திய இரயில்வேக்களின் முன்னேற்றத்திற்கு 100 எஞ்சின்களும், 8,73½ சரக்கு வான்களும் தந்துதவுமாம்.

கல்வி அமைச்சர் விலக்கப்பட்டார்!

ரஷ்யக் குடியரசின் மந்திரிசபையில், கல்வி அமைச்சராக இருந்து வந்த இவான் கெய்ரோ என்பார் பதவிலிருந்து விலக்கப்பட்டுவிட்டார் என்று செய்திகள் அறிவிக்கின்றன.

மாணவர்களிடையே நல்லொழுக்க முறையும்—குறிப்பாக அரசியல் துறையைப் பொறுத்து நல்ல போதனையும் தரவேண்டுமென்று மேற்கொள்ளப்பட்டு வருகிற நடவடிக்கைகளில் இது நியாயமான ஒன்று என்று கூறப்படுகிறது.

கழகச் செய்திகள்

சென்னை—23-வது வட்ட தி. மு. கழகம்

1—4—56 காலை 10 மணிக்கு கழக அறையில், தோழர் ஜே. எஸ். மணி தலைமையில் கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்ற போது, மாவட்டப் பிரதிநிதி தோழர் சி. இராமச்சந்திரன் அவர்களின் விலகுதல் ஏற்றுக்கொள்ளப்பட்டு, தோழர் ந. இரத்தினம் மாவட்டப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டபின், ஜூன் முதல் வாரத்தில் பொதுச்செயலாளரைக் கொண்டு ஒரு பொதுக்கூட்டம் நடத்துவதற்கான நிதி வசூலித்துத் தருமாறு உறுப்பினர்களைக் கேட்டுக்கொண்டு முடிவு செய்யப்பட்டது.

சென்னை 40-வது வட்ட தி. மு. கழகம்

18—3—56-ல், நடைபெற்ற சேப்பாக்கம் தி. மு கழகச் செயற்குழுக் கூட்டத்தில் தோழர் அ. வி செகதீசன் அவர்களின் செயலாளர் பதவி விலகுதல் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், 1—4—56-ல், நடைபெற்ற செயற் குழுக் கூட்டத்தில், தோழர் மு பொன்னுரங்கம் அவர்கள் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

18—3—56-ல் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், தோழர் தி. துரைக்கண்ணு அவர்களின் மாவட்டப் பிரதிநிதி பதவியிலிருந்து விலகிக்கொள்ளும் விலகல் அறிக்கையை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கலையம்புத்தூர் தி. மு. க.

25—3—56 பெரு ஆவுடையார் கோயில் தோப்பில், தோழர் சத்தியேந்திரன் தலைமையில், கழகப் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது அதுபோது, முன்னிருந்த மாவட்டப் பிரதிநிதியும், துணைச் செயலாளரும் அயலூர் சென்றுவிட்டமையால் அவர்களுடைய பதவி விலகல் கடிதத்தை ஏற்றுக்கொண்டு, தோழர்கள் வெங்கடேசலு துணைச் செயலாளராகவும், க மாரியப்பன் மாவட்டப் பிரதிநிதியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பாண்டியூர் தி. மு. கழகம்

23—3—56ல், அரசடிவண்டல் அண்ணா திடலில், தி. மு. கழகக் கூட்டம் தோழர் இராமு தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் இரா. வேலன், இரா. நடராசன் ஆகியோர் கழகத்தின் நோக்கங்களை விளக்கிப் பேசினர்.

சிறுகளப்பூர் தி. மு. கழகம்

சிறுகளப்பூர் (திருச்சி மாவட்டம்) தி. மு. கழக முதலாண்டு விழா, தோழர் சி. தங்கையன் இல்லத்தில், தோழர் சு. இராசகோபால் தலைமையில் நடைபெற்றது. கழகக் கொள்கைகளை விளக்கி தோழர்கள் அரங்கசாமி, சி. இரா. முத்துசாமி, சு. முத்துசாமி, சி. பி முத்துக்கிருட்டிணன், சி. தங்கையன் ஆகியோர் பேசினர். தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

காமராசர் ஆட்சியில் அடக்குமுறை வேகம்

சிறைவாசத்திற்கு பின்னரும் 'ஜப்தி வாரண்ட்' பிறப்பித்தனர்

பிப். 20 அர்த்தாலையொட்டி கைதான சென்னிமலை (கோவை மாவட்டம்) தோழர்கள் 24 பேர்களின் வழக்கு 'மாஜிஸ்திரேட் கோர்ட்'டில் இறுதியாக விசாரிக்கப்பட்டது.

24 பேரில், போதிய சாட்சியங்கள் இல்லாத காரணத்தினால் இருவரை விடுதலை செய்து, ஏனையவருக்கு தலா ரூ 5 அபராதம் விதிக்கப்பட்டது.

தோழர்கள் அபராதம் கட்ட மறுத்து சிறைத்தண்டனையை ஏற்று இன்முகத்துடன் சிறை புகுந்தனர்.

சிறை சென்ற போதிலும் அபராதத் தொகையைக் கட்டும்படி தோழர்களுக்கு 'ஜப்தி—வாரண்ட்' பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. (ந-தி.)

நெய்வேலி சுரங்கத்தில் தேங்கியுள்ள தண்ணீர்

கணிசமான அளவில் குறைந்து விட்டது?

சென்னை, மார்ச். 31—

நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கத்தில், பூமிக்குக்கீழ் தேங்கியுள்ள நீரை வெளியேற்றுவதற்காக மேலும் 8 பம்பு செட்டுகள் ஜெர்மனியிலிருந்து சென்னைக்கு வந்துள்ளன.

மொத்தம் பம்பு செட்டுகள் 24 அனுப்புமாறு கோரப்பட்டதில் 16 பம்புகள்தான் இதுவரை கிடைத்தன; இவைகளின் உதவியால் தண்ணீர் இறைப்பு வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகிறது.

தண்ணீர் இறைப்பு துவங்குவதற்கு முன்னால் நீர்மட்டம் 60 அடியாக இருந்ததாகவும், தற்போது அது 172 அடிக்கு கீழே போயிருப்பதாகவும் தெரியவருகிறது.

முதலில் வந்த 16 பம்புகளை வைத்துக்கொண்டே வேலைகள் நடைபெற்றுள்ளது. 20 குழாய்களைக்கொண்டு தண்ணீர் இறைப்பு வேலை துவங்கப்பட்டால், பூமிக்குக் கீழ் நீர்மட்டமும் கணிசமாகக் குறையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

பழுப்பு நிலக்கரி 170 அடி ஆழத்தில் கிடைக்கிறது. நீர்மட்டம் இந்த ஆழத்திற்கு 50 அடி கீழே குறைக்கப்பட்டால், பின்னர் பழுப்பு நிலக்கரியை ஆபத்தின்றி வெளியே எடுக்கலாம்.

அமெரிக்கா — ரஷ்யா போர்வீரர் எண்ணிக்கை

சோவியத் யூனியனும் குறைக்குமானால், அமெரிக்காவும் தன் இராணுவ வீரர்கள் தொகையை 25-இலட்சமாகக் குறைக்கவும், அதற்கேற்ப தன் ஆயுதங்களையும் குறைக்கவும் தயாராக இருக்கிறதாம்.

"இன்று அமெரிக்கப் படைகளில் ஏறக்குறைய 29 இலட்சம் பேர் உள்ளனர்; இரண்டாவது உலக யுத்த முடிவில் 123 இலட்சம் போர் வீரர் இருந்தனர்; 1952-ல் ஆயுதக் குறைப்புப் பேச்சில் படைகளின் நிலைமை பற்றிய கேள்வி எழுந்த காலத்தில், 36-இலட்சம் பேர் இருந்தனர்; 29-இலட்சம் 25 இலட்சமாகக் குறைவது அமெரிக்கப் படை பலத்தின் விசேடமான குறைவாகும்" என்று கூறப்பட்டுள்ளது.

யுத்தத்தின் முடிவில் சோவியத் படையில் 115 இலட்சம் பேர் இருந்தனரென்றும், இத்தொகை அன்றைய அமெரிக்கப் படையின் தொகைக்கு 8 இலட்சம் குறைவென்றும், எனினும், சோவியத் இன்னும் 40 இலட்சம் பேரை வைத்திருப்பதாகவும் யூகிக்கப்பட்டுள்ளது.

குடிப் பழக்கம் குறைந்து விட்டதாம்

இராணுவத்திலுள்ள நிலை பற்றி விமானப்படைத் தளபதி

ஐதராபாத், ஏப். 1—

"நாடு முழுமையும் மதுவிலக்கு அமுல் நடத்தப்பட்டால் இராணுவமே முதலில் ஒத்துழைக்க முன்வரும்," என்று, விமானப் படைத் தளபதி அர்ஜுன்சிங் கூறியுள்ளார்.

"இராணுவத்தினர் அதிகமாகக் குடிக்கிறார்கள் என்று புகார் சொல்லப்படுகிறது. போர்க் காலத்தில் இராணுவப் படையினர் அதிகமாகக் குடித்தார்கள் என்பது உண்மையே. தற்போது விமானப்படை அதிகாரிகளில் பாதிப்பேர் குடிப்பதேயில்லை; 30 அல்லது 40 சதவிகிதத்தினர் விருந்து கேளிக்கைகளில் மட்டுமே குடிக்கிறார்கள். மற்ற சமயங்களில் குடிப்பதில்லை. சிலருக்கு குடிப்பது பழக்கமாகி விட்டது. அவர்களும் ஒரு வரம்பு வைத்துக் கொண்டிருக்கிறார்கள்" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தீப்பெட்டி உற்பத்திப் பெருக்கத்தை கட்டுப்படுத்தும் சதியா?

தொழில் நெருக்கடியைக் களையக் கண்துடைப்பு ஏற்பாடு!

கோவை, மார்ச் 30—

கையினால் தயாரிக்கப்படும் தீப்பெட்டித் தொழிற்சாலைகளின் நலன்களைக் காத்து உதவிபுரிய சர்க்கார் ஒரு 'கார்ப்பரேஷனை' விரைவிலேயே ஏற்படுத்தும் என்றும், இராமனாதபுரம் மாவட்டத்திலுள்ள சிவகாசியில் இதன் தலைமை அலுவலகம் இருக்கும் என்றும் தெரியவருகிறது.

சென்னை மாநிலத்தில் கையினால் தயாரிக்கும் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் 70 இருக்கின்றன இவை ஆண்டொன்றுக்கு 1,62,50,000 'குரோஸ்' தீப்பெட்டிகள் தயாரிக்கின்றன (144 தீப்பெட்டிகள் அடங்கியது ஒரு 'குரோஸ்'); இத்தொழிற்சாலைகளின் நலன்களை 'கார்ப்பொரேஷன்' கவனித்துக் கொள்ளும்

தொழிற்சாலைகளின் உற்பத்தி சக்தி பல்வேறாக உள்ளதென்றும், கடும்போட்டிகள் உள்ளதென்றும், இயந்திரங்களினால் தயாரிக்கப்படும் தீப்பெட்டிகளின் போட்டா போட்டியை இத்தொழிற்சாலைகளால் சரிக்கட்ட முடியவில்லையென்றும் மாநில சர்க்கார் அதிகாரி ஒருவர் தெரிவித்தனர்.

தீப்பெட்டிகளின் தரம், அளவுக்கேற்ப விற்பனை வசதிகள் செய்து தருவது, நிர்ணயிக்கப்பட்ட விலைகளில் சில்லறை விற்பனையாளர்களுக்கு தீப்பெட்டிகள் விற்க பல் வேறிடங்களில் மொத்த விற்பனையாளர்களை நியமிப்பது, 'கார்ப்பொரேஷனில்' உறுப்பினராக உள்ள தொழிற்சாலைகளின் விற்பனைகள் எல்லாம் 'கார்ப்பொரேஷன்' மூலமாகவே நடைபெறும்படி கவனித்துக்கொள்வது—ஆகியவை, இக் 'கார்ப்பொரேஷனி'ன் முக்கிய அலுவல்கள் என்று சர்க்கார் அதிகாரி விளக்கியுள்ளார்.

உற்பத்திப் பகுதிகள் எல்லாவற்றிலும், உபயோகமாகும் பகுதிகள் எல்லாவற்றிலும் 'கார்ப்பொரேஷன் டெப்போ'க்கள் ஆரம்பிக்கும்; ஒவ்வொரு உற்பத்தியாளரிடமிருந்தும் எவ்வளவு தீப்பெட்டிகள் எடுத்துக்கொள்ளப்படும் என்பதை விற்பனை வசதி நிறுவனம் தெரிவிக்கும்.

துவக்கத்தில் ஆண்டிற்கு 1,62,000 'குரோஸ்' தீப்பெட்டிகள் விற்பனை பொறுப்பை 'கார்ப்பரேஷன்' மேற்கொள்ளும். 'கார்ப்பரேஷன்' நிலையாக ஏற்பட்டுவிட்ட பின்னர், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்படும் புது தொழிற்சாலைகள் தயாரிக்கும் சரக்குகளுக்கும் விற்பனை வசதி செய்துதர 'கார்ப்பரேஷன்' ஏற்பாடு செய்யும்.

'கார்ப்பரேஷனி'ன் பங்கு மூலதனத்தில் ரூ. 3¼ இலட்சம் வரை தர தனிப்பட்ட தீப்பெட்டித் தொழிற்சாலை முதலாளிகள் சம்மதித்துள்ளதாகத் தெரிகிறது. 1954 ஆண்டு முதல் 6 மாதத்திற்கு நாளொன்றுக்கு சராசரி உற்பத்தி அடிப்படையில் 'குரோஸ்' ஒன்றுக்கு ரூ 6 வீதம், ரூ. 3¼ இலட்சம் வரை பங்கு மூலதனம் தரப்படும்.

தென்னாட்டின் 'மைக்கா'வின் தரம் உலகப் புகழ்வாய்ந்தது

விற்பனைக்கு வசதிகள் ஏற்பட்டால் அதிகமான வேலை வாய்ப்புக்கு இடமுண்டு

ஆட்சியாளருக்குத் தொழிலதிபர் சுட்டிக் காட்டுகிறார்

சென்னை, மார்ச். 31—

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் மேலும் 1,20,00,000 பேருக்கு வேலைவாய்ப்புகள் தர இருக்கிறது; அதில் தென்னிந்தியா முழுமைக்குமாகக் கிடைக்கவேண்டிய பங்கு 40,00,000 வேலைகள். காட்டு இலாகா உட்பட மற்ற விவசாயத்துறை வேலைகள் விஸ்தரிப்பினால் ஓரளவுக்கு அதிக அளவில் தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கக்கூடும்; ஆனால், கைத் தொழில்களினால், வருங்காலத்தில் முன்னேற்றத்திற்குரிய பல வேலைகளுக்கான வாய்ப்புக்கள் தேவையான அளவிற்குக் கிடைத்தாலும்கூட, உடனடியாக அதிகமான அளவில் வேலை வாய்ப்புகள் கிடைக்க முடியாது"

என்று, தென்னாட்டின் தொழில் துறை சக்தி' என்ற தலைப்பில் பேசுகையில், தொழிலதிபர் எஸ். அனந்தராமகிருஷ்ணன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் தென்னாட்டின் மூலப் பொருளைப் பற்றிப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"தென்னிந்தியாவில் கிடைக்கும் 'மைக்கா'வின் தரம் உலக முழுமைக்கும் பெயர் பெற்றிருக்கிறது. என்றாலும், இங்கு தற்போது கடைப்பிடிக்கப் பட்டுவரும் 'லைசென்சு' வழங்கும் முறையினால் பெரும்பாலும் தனிப்பட்டவர்கள்தான், அத்தொழிலுக்குத் தேவையான பண முதலீடு இல்லாமலும், தேவையான 'மார்க்கெட்டிங்' வசதிகள் இல்லாமலும் மேற்கொண்டுவருகின்றனர். இந்தப் பகுதியில் தோண்டி யெடுக்கப்பட்டுள்ள 'மைக்கா'வை யெல்லாம் விலைக்கு வாங்குவதற்கென ஒரு மத்திய நிறுவனம் ஏற்படுத்தி, 'மைக்கா'வை உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் விற்பனைக்கு அனுப்பினால் அதனால் 'மார்க்கெட்டிங்'குக்கு தேவையான வசதியுடன், சுரங்கத்தவர்களுக்கும் வருமானம்தரக்கூடியதாக அமையும்; இம்முறையில் இது மேலும் விருத்தியடையுமானால், வேலைகளும் அதிகரிக்க ஏதுவாகும்."

மதுவிலக்குத் திட்டம்

மக்கள் சபை சிபாரிசு

புதுடில்லி, மார்ச். 31—

மதுவிலக்குத் திட்டம், 2-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாகக் கருதப்படவேண்டும் என்றும், நாடு முழுமையும் மதுவிலக்குத் திட்டத்தைத் துரிதமாகவும், ஆற்றல் மிக்க முறையிலும் அமுல் நடத்த திட்டக் குழு ஒரு திட்டம் வகுக்கவேண்டுமென்றும், மக்கள் சபை சிபாரிசு செய்துள்ளது.

இது பற்றி மத்திய அரசினர் அமைச்சர் நந்தா கருத்தறிவிக்கையில், "மதுவிலக்குத் திட்டம் முழு வெற்றிபெற்று விட்டதாகச் சொல்லமுடியாது. அது முழு வெற்றி பெறவில்லை. அது முழு வெற்றி பெறுதவரையில், அதை வெற்றி பெறும்படிச் செய்வதற்கான முறைகளைக் கையாள்வது அவசியம்" என்று கூறியுள்ளார்.

வேலையற்றோருக்கு வேலை தர வாய்ப்பு?

கூட்டுறவு நிலையங்கள் ஏற்படுத்த ஆலோசனையாம்!

எப்போது நிறுவப்படும் என்பதை கூற இயலாதாம்

படித்துவிட்டு வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு வேலை வாய்ப்புகள் தருவதக்கென மாநிலத்தில் கூட்டுறவு நிலையங்கள் ஏற்படுத்த வேண்டுமென சர்க்கார் ஆலோசித்து வருகிறதென்று சென்னை சட்டசபையில் அமைச்சர் மாணிக்கவேலர் கூறியிருக்கிறார்.

"என்றாலும் அந்தக் கூட்டுறவு நிலையங்கள் எப்போது, எப்படி நிறுவப்படும் என்பதை என்னால் கூறமுடியாது" என்றும் அவர் பேசியிருக்கிறார்.

மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர், படித்தும், படிக்காமலும் இருக்கும் வேலையற்றோர்—ஆண்களும் பெண்களுமாக—எத்தனை பேர் இருக்கின்றனர் என்பது குறித்துச் சர்க்கார் எவ்விதப் புள்ளி விவரக் கணக்கும் வைத்திருக்கவில்லை என்றும், தற்போது அப்புள்ளி விவரச் சேகரிப்பு வேலையை மத்திய சர்க்கார் மேற்கொண்டிருக்கின்றனர் என்றும் தெரிவித்திருக்கிறார்.

தஞ்சை மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை

மூன்றரை இலட்சம் ரூபாய் திருப்பியனுப்பப்பட்டதாம்!

நாகப்பட்டினம், மார்ச் 29—

"இவ்வருட அபிவிருத்தித் திட்டத்துக்காக தஞ்சை மாவட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட ரூ. 10 இலட்சம் தொகையை பயன்படுத்திக்கொள்ளாமல் ரூ. 3¼ இலட்சம் சர்க்காருக்கு திருப்பி அனுப்பப்பட்டது,"

என்று, தஞ்சை மாவட்ட அதிகாரி வி. கார்த்திகேயன் வெள்ளையாற்றின் பாலத்திற்கு கால்கோல் விழா ஆற்றுகையில் கூறியுள்ளார்.

அவர் மேலும் பேசுகையில், குடியரசு நாட்டில் சர்க்கார் ஊழியர்கள் பொதுமக்களை தங்களின் எஜமானர்களாகக்கொண்டு அவரவர் கடமைகளை நிறைவேற்றுவது சிறந்த சேவை என்றும், தனக்கு நாளொன்றுக்கு அதிகாரிகளைக் குறைகூறும் மனுக்கள் 10 வருவதாகவும், அவைகளில் முக்கால் பகுதி பொய்க் குற்றங்கள் சுமத்தி எழுதப்பட்டிருப்பதாகவும், இதன் காரணமாக உண்மை மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியவில்லை என்றும், இதன் பயனாக அதிகாரிகளின் காலம் வீணாகின்றதெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியப் பேரரசின் ஓரவஞ்சனை மீது போர்!

‘சென்னைத் திட்டத்திற்கு ஒதுக்கியுள்ள தொகை மிகக் குறைவானது’

‘எனக்கு ஏற்பட்டுள்ள ஏமாற்றத்தை நான் மறைத்துக்கொள்ள விரும்பவில்லை’

‘தேவிகுளம்-பீர்மேடு பற்றிய அநீதியான தீர்ப்பில் நடந்ததுபோல் நடக்கமாட்டேன்’

‘சென்னையின் தொழில் வளர்ச்சியை விந்தியப் பிரதேசத்தைக் கொண்டா மதிப்பிடுவது?’

‘பொறுப்புள்ள பதவியிலுள்ள ஒருவர் இப்படியா பேசுவது?’

குறுகுறுக்கும் நெஞ்சு படைத்த நிதி மந்திரியின் முகாரி!

சென்னை, ஏப். 2—

“நிதிக்குழுத் தலைவரான கே. சந்தானம் அவர்கள், தொழில் துறையில் சென்னை அபிவிருத்தியடைந்துவிட்டது என்று கூறியிருக்கிறார். எதை அடிப்படையாக வைத்து அவர் இப்படிக் கூறியிருக்கிறார் என்பது தெரியவில்லை. விந்தியப் பிரதேசம் போன்ற இடங்களுக்கு அவர் போய்விட்டுவந்த பிறகேனும், அப்பகுதிகளைவிட சென்னை மாநிலம் எவ்வளவோ தூரத்திற்கு அப்பால் கிடக்கிறது என்பதை உணர்ந்திருக்கவேண்டும். எப்படியானாலும், நிதிக்குழு போன்ற இடங்களில் உறுப்பினர்களாக நியமனம் பெறுகின்ற யாரானாலும், இப்படிப்பட்ட கருத்துக்களையெல்லாம் முன்கூட்டியே தெரிவித்துவிடுவது தகாது என்பதுதான் என்னுடைய விருப்பம்.”

“இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சென்னைக்கு இப்போது ஒதுக்கப்பட்டிருக்கிற நிதி உதவியில் நான் ஏமாற்றமடைந்திருக்கிற உண்மையை இந்தச் சபையில் எடுத்துக்கூறாமல் மறைக்க விரும்பவில்லை. தேவிகுளம், பீர்மேடு பகுதிகளைப் பொறுத்த பிரச்சினையில் மத்திய சர்க்கார் அளித்தத் தீர்ப்பு அநியாயமானதாகவே இருந்தாலும்கூட சபை அத்தீர்ப்பை ஒத்துக்கொள்ள வேண்டும் என்று கூறினேன் என்றாலும், இந்தப் பிரச்சினையில்—இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சென்னைக்கு அதிகமான நிதி ஒதுக்க வேண்டுமென்ற கோரிக்கையில் தாமதத்திற்கு இடம் தராமல் அதற்கு நியாயமாகக் கிடைக்க வேண்டியவைகளை வற்புறுத்திக்கொண்டே இருக்க வேண்டும். இப்போது தரப்பட்டிருக்கிறதை வைத்துக்கொண்டு திருப்தி அடைந்துவிடக்கூடாது.”

—என்று அமைச்சர் சுப்பிரமணியம், சென்னை சட்டசபையில், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட நகல் திட்ட விவாதத்தைத் துவக்கி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் பேசுகையில் குறிப்பிட்டார்:—

“ஒரு குறிப்பிட்டப் பகுதியில் மட்டுமே பெரியபெரிய தொழில்கள் ஏற்படுத்தப்பட்டுக் கொண்டுஇருந்தால் நாட்டிலுள்ளோரிடையே ஏற்றத் தாழ்வு மனப் பான்மைகளும், குரோத உணர்வும் ஏற்பட்டுத்தான் தீரும். எனவே, எல்லா இடங்களையுமே ஒரே சீராகக் கவனிப்பதென்று இப்போது ஏற்பட்டிருக்கிற கருத்தை நடைமுறையில் அமுலாக்கவேண்டியது அவசரமான ஒன்றேயாகும்.”

சென்னை மாநில இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட தொகையான ரூ. 107·3 கோடிக்கும் அதிகமாக மேலும் நிதி ஒதுக்க வேண்டுமென்று மத்திய சர்க்காரை மாநில சர்க்கார் வலியுறுத்துவதாக, அவர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

நாடு முழுமையிலும் ஒரே சீரான அபிவிருத்தி நிலை ஏற்படவேண்டும் என்ற அடிப்படையிலும் இங்கு கிடைக்கிற வசதிகள், தொழில் நுணுக்கத் திறமைகளைக் கருதியும் கணக்கிட்டால் சென்னை மாநிலத்திற்குப் பெரிய அளவில் தொழில் திட்ட நிதி ஒதுக்கப்பட வேண்டும் என்றும், என்றாலும், நாடு முழுமையும் ஒரே அங்கமாகக் கவனித்தால் சென்னை [மாநி]லம் தொழில் துறையில் பின்தங்கியோ, அல்லது மற்ற மாநிலங்களைவிட முன்னேற்றம் ஏற்பட்டோ இருக்கிறது என்று கூறுவதற்கில்லை என்றும், பம்பாய், மேற்கு வங்கம் போன்ற பிற மாநிலங்களுடன் ஒப்பிடும்போது, சென்னை தொழில் துறையில் பெரும் அளவு வேற்றுமைகள் உள்ளன என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

மக்கள் தொகையை அடிப்படையாகக் கொண்டு கவனித்தாலும்கூட இம்மாநிலத்திற்கு ரூ. 220 கோடி தேவைப் படுகின்றது. ஆனால் முதலில் ரூ. 182 கோடியாக வெட்டப்பட்டு, பின்னர் இரண்டாம் முறையாக 172 கோடியாக அது குறைக்கப்பட்டு விட்டது என்றும் கூறியிருக்கிறார்.

“தனியார் தொழில் துறையிலும்கூட சென்னை மாநிலம் அதற்குத் தேவையான அளவு நிதி உதவி பெறவில்லை. நாடு முழுமையிலுமாகத் தனியார் துறைத் தொழில் நிதிக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற ரூ.4,800 கோடியில், நிலவரிக்கு ரூ. 1,000 கோடி சென்றுவிட்ட பிறகு மீதியுள்ள மொத்தம் ரூ. 3,800 கோடியில், சென்னை மாநிலத்திற்கு தேவைக்குப் போதுமானதாக இல்லாமல் ஒரு சிறு அளவு தொகையே தரப்பட இருக்கிறது. சென்னை மாநிலத்திலுள்ள முக்கியமான திட்டமெல்லாம நெய்வேலித் திட்டம்தான். அதற்கே ரூ. 50 முதல் 60 கோடி வரைதான் செலவிடப்பட இருக்கிறது” என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

சென்னையில் கனரகத் தொழில்கள் ஏற்படுத்தவேண்டுமென்ற சென்னையின் கோரிக்கையை வற்புறுத்தி அமைச்சர் மேலும் பேசுகையில், இங்குள்ளவர்களுக்குத் தேவையான வேலை வாய்ப்புக்களையெல்லாம், தொழிற்சாலைகள் நிறுவுவதின் மூலம்தான் ஏற்படுத்த முடியும் என்றும், அப்படிப்பட்ட தொழிற்சாலைகள் நிறுவ இந்த மாநிலம் இயற்கையான வசதிகளும், வாய்ப்புகளும் கொண்டதாக இருக்கிறது என்றும் கூறிவிட்டு, சேலம் மாவட்டத்தில், அலுமினியப் பொருள் தயாரிப்பதற்கான மூலப் பொருட்கள் அனைத்தும் கிடைப்பதையும், இரும்பு,உருக்குத் தொழில்கள் துவக்குவதற்கான வசதிகளையும் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

இந்த விவரங்களையெல்லாம், மாநில சர்க்கார், திட்டக் குழுவின் கவனத்திற்கு ஏற்கனவே கொண்டுவந்திருக்கிறது என்றும், எனவே, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நமது மாநிலத்தில் ஒன்றிரண்டு கனரகத் தொழிற்சாலைகளாயினும் நிறுவுவதற்குத் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கத் தூண்டும் வகையில், இக்கோரிக்கைகளை, சட்டசபை தனது ஒருமனதான கருத்துடன் அதற்கு ஆதரவுதர வேண்டுமென்றும், நாடு முழுமையிலுமுள்ள கை நெசவுத் தொழிலாளர்களில் 25 சதவிகிதத்தினரைக் கொண்ட இம்மாநிலத்தில் அவர்களுக்கு விசேட கவனம் செலுத்தவேண்டியிருக்கிறதென்றும், எனவே, பெரிய தொழிற்சாலைகளைக் கவனிக்கிற நேரத்தில் சிறு தொழில்களுக்கும், குடிசைச் தொழில்களுக்குப் கவனஞ் செலுத்தவேண்டுமென்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

அறியாமையின் விளைவு!

காசி, மார்ச். 30—

இங்குள்ள அன்னபூரணா ஆலயத்தில் ஒரு கல்லூரி மாணவன் ‘தேவி’யை வணங்கிவிட்டு, காணிக்கை செலுத்துவதற்காக தன் நாக்கை ஒரு ‘பிளேடி’னால் அறுத்தானாம்.

பின்னர், அறியாமை நிரம்பிய அம்மாணவன், மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, குணமடைந்து வருவதாகத் தெரியவருகிறது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பழ உற்பத்தி முன்னேற்றத்திற்காக, சுமார் 8 கோடியிலிருந்து ரூ. 9 கோடிவரை செலவாகக்கூடிய திட்டம் ஒன்று சேர்க்கப்பட்டிருக்கிறதாம்!

★★★

<u>தி. மு. கழக 2-வது மாநில மாநாடு—திருச்சி அறிக்கை</u>

‘ஸ்டால்’கள் காண்ட்ராக்ட் எடுப்போர் தேவை

1956 மே மாதம் 17, 18, 19, 20 ஆகிய நாட்களில், திருச்சி பந்தயத் திடலில் (‘ரேஸ் கோர்ஸ்’ மைதானம்) நடைபெற இருக்கும் தி. மு. கழக இரண்டாவது மாநில மாநாட்டில் கீழ்க்கண்டவைகளை மொத்தமாகக் காண்ட்ராக்ட் எடுத்து நடத்த முன்வருபவர்கள், தங்களது அதிக பட்சத் தொகையைக் குறிப்பிட்டு எழுதி, அந்த விண்ணப்பத்தைச் சீல் போட்ட கவரில் வைத்து, 10—4—56-ஆம் நாள் மாலை 4 மணிக்குள் அ. பெ. தருமலிங்கம், வரவேற்புக் குழுத் தலைவர், மாநாட்டு அலுவலகம், 9, கிலேதார் தெரு, தெப்பக்குளம் அஞ்சல், திருச்சி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மொத்தமாகக் காண்ட்ராக்டுக்கு விடப்படுபவை:

10 × 10' கொண்ட ‘ஸ்டால்’கள் 50-ஐ வாடகைக்கு விடுதல்;

சைக்கிள் ‘ஸ்டாண்டு’ வைத்தல்;

மோட்டார் கார் ‘ஸ்டாண்டு’ வைத்தல்;

மாநாட்டு ‘காம்பவுண்டு’க்குள் விளம்பரத் தட்டிகள் வைத்தல்;

ஒலிபெருக்கி மூலம் குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் வியாபார விளம்பரம் செய்தல்;

16,000 சதுர அடி பந்தலில் சாப்பாட்டு (ஹோட்டல்) ஏற்பாடு செய்தல்;

சோடா—கலர்—மோர்—இளநீர் விற்றல்.

மாநாடு பற்றிய குறிப்புகள்:

மாநாட்டுத் திடல் 1000' × 2000' அளவுள்ள ‘காம்பவுண்டு’ கொண்டதாக இருக்கும்;

மே 17, 18, 19, 20 ஆகிய நான்கு நாட்கள் நடைபெறும்;

நாள்தோறும் காலை—மாலை மாநாட்டு நிகழ்ச்சிகள், இரவு நாடகங்கள் உண்டு;

குறைந்தது மூன்று இலட்சம் பேர் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது;

திருச்சி ‘ஜங்ஷனி’லிருந்து பந்தல் ஆறுபர்லாங் தொலைவில் அமைந்திருக்கிறது.

அ. பெ. தருமலிங்கம்
—தலைவர் வரவேற்புக் குழு

★★★

தண்டவாளத்தின் மீது மறியல் செய்தனர்

போலீசார் தடியடிப் பிரயோகம்

பம்பாய், ஏப். 3—

நேற்று காலை மத்திய இரயில்வே பிரிவில் பம்பாயிலிருந்து 12 மைல் தூரத்திலுள்ள காட்கோப்பர் இரயில்வே நிலையத்தில் ஒரு கூட்டத்தினர் உள்ளூர் இரயில் போக்குவரத்துக்கு சுமார் ஒரு மணிநேரம் வரை இடையூறு விளைவித்து இரயில் போகமுடியாதபடி தடுத்துவிட்டனராம்.

ஏப்ரல் முதல் தேதியிலிருந்து புதிய இரயில்வே கால அட்டவணைப்படி ஒரு இரயில் ரத்துசெய்யப்பட்டதை எதிர்த்து சுமார் 300 பேர் இரயில் தண்டவாளங்கள்மீது மறியல் நடத்தினார்களாம். இரயில்வே போலீசார் தடியடி செய்து அவர்களை கலைக்கவேண்டியிருந்ததாம்.

அணுகுண்டு சோதனை தலையிட முடியாதாம்!

மார்ஷல் தீவுகளில் அணுகுண்டு பரிசோதனைகள் நடத்த அமெரிக்கா தீர்மானித்துள்ளதல்லவா? அதில் தலையிட முடியாதென ஐ. நா. தர்மகர்த்தா பொறுப்புக் குழு தீர்மானித்துள்ளதாம்.

மார்ஷல் தீவுகளில் நடைபெறவிருக்கும் அணுகுண்டு சோதனையைத் தடைசெய்ய வேண்டும் என்று கடந்த வாரம், மார்ஷல் தீவுகளின் பிரதிநிதிகள் மனுக்கள் அனுப்பியிருந்தனராம்.

‘எந்த நாட்டவராலும் மாற்ற முடியாதாம்’

நீதியின் அடிப்படையில் காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வுகாண பாகிஸ்தான் உறுதி கொண்டிருப்பதாகவும், இவ்வுறுதியை உலகத்தின் எந்நாட்டவராலும் மாற்ற முடியாதென்றும் பாகிஸ்தான் குடியரசுத் தலைவர் இஸ்கந்தர் மிர்சா கூறியுள்ளாராம்.

கோலார் தங்க வயல்கள் தேசியமயமாகும் பிரச்சினை

புதுடில்லியில்முடிவுசெய்யப்படும்

கோலார் தங்கச் சுரங்கங்களை அரசினர் எடுத்து நடத்தவேண்டுமா என்னும் பிரச்சினை பற்றி ஏப். 16-ந் தேதியன்று புதுடில்லியில் நடைபெறும் மாநாட்டில் முடிவு செய்யப்படுமாம்.

இம் மாநாட்டிற்கு, மைசூர் முதலமைச்சர் அநுமந்தையா அழைக்கப்பட்டிருக்கிறாராம்.

இந்தியாவில், நபர் விகித மின்சார உற்பத்தி அளவு, 1938-லிருந்து 1953 வரையுள்ள காலத்தில் 100 சதவிகிதத்துக்கும் அதிகமாகப் பெருகிவிட்டது.

சென்னை—5-வது வட்ட தி. மு. கழக தோழர்களுக்கு:

5—4—56 மாலை 7 மணியளவில், கழக இல்லில், கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். அதுபோது, பல முக்கிய பிரச்சினைகள் ஆய்வுக்கு வரும்.

திருக்குறள் வகுப்பு

4—4—56 மாலை 6 மணிக்கு, சென்னை—புரசைபாக்கம், எண் 100, வெள்ளாளத் தெரு, தொண்டைமண்டல வேளாளர் சங்கத்தில், பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் திருக்குறள் வகுப்பு நடத்துவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.